செ.வெ.எண்: 09/மே நாள்: 04.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் கண்ணியமாக வாக்களிப்பது தொடர்பான வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பொதுமக்கள் எடுத்துக்கொண்டனர்.

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியம், சோழந்தூர் மற்றும் பாரனூர் ஆகிய கிராமங்களில் இன்று (04.05.2016) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் தலைமையில், கண்ணியமாக வாக்களிப்பது தொடர்பான வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியினை பொதுமக்கள் எடுத்துக்கொண்டனர்.

சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016 வாக்குப்பதிவு நாள் நெருங்குவதை முன்னிட்டு மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவு எய்திட இலக்காக கொண்டு பொதுமக்களிடையே பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேவேளையில் வாக்களிப்பதற்கு எவ்வித பணமோ, பொருளோ ஏதும் பெறாமல் கண்ணியமான முறையில் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் இன்றைய தினம் திருவாடானை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றித்தில் உள்ள சோழந்தூர் மற்றும் பாரனூர் ஆகிய கிராமங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் தலைமையில், கண்ணியமாக வாக்களிப்பது தொடர்பான வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியினை பொதுமக்கள் எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திரு.ஜெயக்குமார் உட்பட வட்டாட்சியர், தேர்தல் துணை வட்டாட்சியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**